# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்
உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 27 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 27


## உக்கிராணத்துவம்

வேதாகமத்திலே பணம், உரிமை, அதனோடு சேர்ந்த நம் அனுகுமுறை இவ்வாறாக இவைகளைக் குறித்த 2000 க்கும் மேற்பட்ட வசனங்களை நாம் காணலாம். நம்முடைய ஆவிக்குரிய காரியங்களும், உலகப்பிரகாரமான பணத் தேவைகளுக்கும் இதைச்சார்ந்து முடிவெடுக்கலாம்.

பணத்தின் தேவைகளும் நம்முடைய கடமைகளும் அன்றாட வாழ்வின் காரியங்களிலே இன்றியமையாதது. தேவனுடைய சுவிசேஷப்பணி செய்யவும், குடும்பத்தை கவனிக்கவும் எழைகளுக்கு உதவிடவும், பணம் தேவை. வாழ்வின் அதிகமான தேவைகளிலே இன்றியமையாததாக பணம் இருப்பதாலே தேவன் அதை உபயோகிக்கும் விதம் குறித்த ஞானத்தை நமக்குத் தந்திருக்கிறார். ஒருவருடைய பொருளாதார நிலை அல்லது நிலைப்பாடு என்பது அவருடைய மனதையும் உணர்வையும் பாதிப்பதால் ஆவிக்குரிய வாழ்வும்கூட பாதிக்கப்படும். ஆகவே பணத்தின் தேவைகளை சரியாக புரிந்து கொண்டு தேவனோடு அனுதின வாழ்வில் உள்ள உறவை சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதி 1 : 1). நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகிறது (யாக் 1 : 17). தேவன் தாம் சிருஷ்டித்த மனுஷன் தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட படைப்புகளை சரியாக நிர்வகித்துக் கொள்வான் என்று நம்புகிறார். ஆகவே தேவஜனங்களாகிய நாம் இந்த உலகம் நம்முடையதல்ல அது தேவனுடையது என்பதை புரிந்து கொண்டால் நல்லது. இங்குள்ள பொருள்கள் மற்றும் தேவன் நமக்குத் தந்த உக்கிராணத் துவத்திலே, தேவனுடைய நாமத்தின் மகிமைக்கேற்ற விதமாய் செயல்பட வேண்டும். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது (1 தீமோ 6 : 10). இயேசு கூறுகிறார் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது. தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது (பணம் பொறுப்பு) (மத் 6 : 24). ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாம் பணத்திற்கு அடிமையாக இருக்க கூடாது. உலகம் மாயையானது உண்மையான பொக்கிஷம் இங்கே இல்லை என்பதை உணரும் போதுதான் உண்மை விளங்கும்.

ஞானமுள்ள உக்கிராணக்காரன் சுயநலமாய் தோன்றுகிற முடிவுகளை அல்ல,தம் எஜமானுக்கு சரியாய் இருக்கின்ற முடிவுகளையே செய்வான். அதுபோல தான் ஆவிக்குரிய உக்கிராணக்காரர்களாகிய நாம், தேவனுக்கேற்ற விதமாய் கவனமுடனும, விவாசத்திற்குப் பாத்திரமாகவும் நடந்து நேர்மையாய் ஒழுங்காக பொறுப்பாக ஆவிக்குரிய காரியங்களில் மேலாண்மை செய்யகடவோம். உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம் (1 கொரி 4 : 2).


லூக் 16 : 11 ல் இயேசு பின்வரும் கேள்வியை கேட்கிறார், அநீதியான உலகப் பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? தாலந்தை குறித்த உவமையில் சொல்லப்பட்டது போல (மத் 25 : 14 -30), தேவன் தந்த பொறுப்புகளில் கிறிஸ்தவர்களாகிய நாம் விசுவாசத்திற்கு பாத்திரவான்களாய் நடந்தேற வேண்டும். உண்மையுள்ள உக்கிராணத் துவமானது பணம் எந்த வழிகளில் சம்பாதிக்கப்படுகிறது, செலவு செய்யப்படுகிறது? முதலீடு செய்யப்படுகிறது, நிர்வகிக்கப்படுகிறது என எல்லா நிலைகளிலும் தேவனுக்குப் பிரியமாய் நடந்து கொள்ள வேண்டும்.



**“ இந்த ஆவிக்குரிய காரியங்களின் ஒழுங்கைப் போல பொருளாதார ஒழுங்குபடுத்துதலும், நிர்வகித்தலும், தேவனுக்கு முன்பாக உண்மையான உக்கிராணமாய் இருக்ககடவது”**


| | | | | |
|---|---|---|---|---|
| உக்கிராணத்துவம் பக்கம் - 1 | தலையங்கம் | ஒருநோக்கு செய்தி உக்கிராணத்துவம் | உக்கிராணத்துவ நெறிமுறைகள் பக்கம் - 5 | உங்களுக்குத் தெரியுமா? ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
| வறுமை இறையியல் வளமை இறையியல் பக்கம் - 2 | பல மடங்காக்கும் கூட்டுவட்டி பக்கம் - 3 | பக்கம் - 4 | திருமணம் - பொருளாதாரம் பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3:16-17; 2 பேது 1:20-21; மத் 24:35

**அன்பு**
மத் 22:37-40; யோவா 14:21-23, 1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**
அப் 3:19; 17:30; 2 கொரி 7:10

**புதுசிருஷ்டி**
யோவா 3:3-7; 2 கொரி 5:17; ரோம 6:1-4, எபே 2:1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5:18; மத் 1:21; யோவா 8:11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**
லூக் 1:73-75; எபி 12:14; 1 பேது 1:15-16; தீத்து 2:11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6; 1 கொரி 12:12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**
யோ 17:20-23; கலா 3:28; வெளி 18:2-4

**நியமங்கள்**
மத் 28:19-20; 26:26-30; 1 கொரி 11:23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4:18, ஏசா 53:4,5, யாக் 5:13-16

**விவாக முறைமை**
மத் 19:5-6; லூக் 16:18; ரோம 7:2-3; 1 கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2:9-10; 1 கொரி 11:14-15; உபா 22:5

**கடைசிகாலம்**
2 பேது 3:7-12; யோவா 5:28, 29; 2 கொரி 5:10; மத் 25:31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4:23, 24; எபே 5:19; 2 கொரி 3:17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16:15

## வறுமை இறையியலும் வளமை இறையியலும்

நம் சமுகத்தில் இந்த இரண்டுவிதமான பொருளாதார சூழ்நிலையில் நிறைய வேறுபாடுகள் உண்டு. பல வேத வசனங்களைக் கொண்டு நாம் இதை தியானிப்போம்.



வறுமை இறையியல் எனும் கொள்கையானது தேவன் ஆஸ்தியை விரும்புவதில்லை ஆகவே எழ்மை என்பதே அவரைப் பிரியப்படுத்துவது என கருதுவது. அதிலும் தன்னார்வமாக ஏழ்மையான சூழலை ஏற்றுக்கொள்வது மேலான நெறிமுறை.
இது ஒருவிதமான ஜனங்களால் துறவி போன்று வாழும் நிலையை சார்ந்தது. இது கீழ்காணும் வசனங்களை மேற்கோள் காட்டுகிறது. ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு ஐயோ (லூக் 6 : 20, 24). உங்களுக்கு உள்ளவைகளை விற்று (லூக் 12 : 33), ஐசுவரியங்களும் நமக்குள்ள பொறுப்புகளினால் கிடைத்த செல்வங் களும் சாபமாக கருதப்படுகிறது. ஆகவே இந்த கொள்கைளை பின்பற்றுகிற ஜனங்கள் ஏழைகளாய் வாழ்வதினால் அவர்களால் தரித்திரருக்கு உதவ இயலாது.
வளமை-செழிப்பின் இறையியல் (ஆரோக்கியமும் செல்வமுமான சுவிசேஷம்) கொள்கையானது பொருளாதார ஆசீர்வாதங்கள் தேவனால் அருளப்படுகிறவை என்கின்றனர். ஒருவருடைய தனிப்பட்ட அதிகாரமானது முதலாவது தேவனுக்கும், மனுக்குலத்திற்கும் ஒரு உடன்படிக்கை செய்யும்படியாக வலியுறுத்துகிறது – கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, விசுவாசிக்கிறவர்களானால், கர்த்தர் உலகப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் அருளிச்செய்வார் இந்த கொள்ளை மேற்கோள் காட்டும் வசனங்கள்: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது (மத் 17 : 20). மேலும் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார் (மத் 21 : 22). நாம் விசுவாசமாய் தேவனிடத்தில் கேட்பதை வலியுறுத்துகிறது கேட்டு பெற்றுக்கொள், ஒரு எழுத்தாளர் மிகச் சரியாக இந்த கொள்கையை கிறிஸ்தவ மந்திரவாதம் என கூறியிருக்கிறார். உலகப்பிரகாரமான ஐசுவரியத்தின் மேன்மையை தவறாக தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு ஒப்பிட்டு கூறியிருக்கிறார்.

ஆகவே வறுமை இறையியலும் வளமை இறையியலும் பாதி சத்தியத்தின் வெளிப்பாடேயல்லாமல் முழுமையானதல்ல ஆவிக்குரிய காரியத்தில் இயல்பாகவே வறுமை, வளமை என்பது கிடையாது. துன்பம் என்பது தேவனுக்கு கீழ்படியாததின் அடையாளமோ அல்லது செழுமை என்பது தேவனுடைய அங்கிகாரத்தின் அடையாளமோ அல்ல கிறிஸ்தவர்கள் எப்போதும் தம்முடைய பொருள், செல்வங்கள் சம்மந்தமான ஐசுவரியங்களுக்கு அடிமையாகாமல் தாராளமாய் பிறருக்கு கொடுக்கும் ஈகை குணம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். சகலத்திற்கும் தேவன் பேரில் விசுவாசமும் பற்றுதலுமாயிருப்பது நலம். ஒவ்வொருவரும் நம்முடைய உள்ளானமனுஷனில் பெலப்படவே தேவனை பின்தொடர வேண்டும். மற்றபடி வெளியரங்கமான மாம்சீக ஆசீர்வாதங்களுக்காக மாத்திரமல்ல, நல்ல உக்கிராணக்காரனாகிய நாம் வேதத்தின் அனைத்து விதிமுறைகளையும் கைக்கொண்டு வாழ பழக வேண்டும். ஒருசில கருத்தான ஏழ்மை அல்லது வளமை இறையியல் என்று சிலவற்றை மட்டும் சார்ந்து வாழக்கூடாது.

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.*

*படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :–*


**டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்துகொள் உன் மந்தைகளின் மேல் கவனமாயிரு. (நீதி 27:23).

இந்த இதழில் வேதாகமத்தின் பொருளாதார உக்கிராணத்துவம் குறித்து பார்க்கலாம். தேவனுடைய வசனத்திற்குள் அடங்கியுள்ள ஏராளமான செய்திகளை அறிந்து பிரமிப்படைந்தேன் ஆகவே பெரிதான காரியங்களை குறிப்பிட்டு எழுதுவதே எனக்கு சவாலாக அமைந்தது. உக்கிராணத்துவம் என்பது தேவபிள்ளைகளுக்கிடையே பரவலாக பேசப்படாததினால்தான் திருமண காரியங்களிலும், சுவிசேஷப் பணிகளிலும் நிர்வாகத்திறமையும் சரியான உக்கிராணத்துவமில்லாமையால் பொருளாதார செலவு செய்து கொண்டிருக்கிறோம்.

தேவன் நம்மிடத்தில் ஒப்புவித்த ஆவிக்குரிய நடத்தைகளில் தாக்கம் ஏற்படாதவாறு பொருளாதார மேலாண்மை சார்ந்து முடிவு எடுக்கும் போது கவனம் தேவை. பொருள் முதலீடுகளினாலோ அல்லது கடன் பிரச்சனைகளால் பல கிறிஸ்தவர்கள் இன்று பணத்திற்கு அடிமையாகிக் கொண்டு இருக்கிறார்கள். கர்த்தாவே அதற்கு சரியான நிலையை எங்களுக்கு காட்டும்.

இந்த காரியத்தை மிகைப்படுத்தி பேசவில்லை ஆனால் படிக்கிறவர்களின் தாகம் தீரும்படியாக தீட்டி கூராக்கப்பட்ட உண்மைகளை புரிந்து கொள்ளும்படியாக அமைந்திருக்கும் என்று நம்புகிறேன். மேலான ஒரு காரியத்தை தழுவி, மற்ற உண்மைகளை உக்கிராணத்துவத்தில் புரிந்துகொள்ளுங்கள். நேரம் செலவிட்டு உங்கள் நிதி நிலையை புரிந்து வைத்துக் கொள்ளுங்கள். அதைப்பொறுத்து நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் மற்றவர்களுக்கு எவ்வளவு உதவமுடியுமோ அதைச் செய்யுங்கள்.


**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

## பல மடங்காக்கும் கூட்டுவட்டி

பணத்தை சேமிக்கவும், முதலீடு செய்யவும் தக்கசமயம் நோக்கி காத்திருப்பது ஏற்றதல்ல.ஏழையோ, செல்வந்தனோ நம்மால் இயன்ற அளவு முதலீடு செய்து சேமிக்கமுடியும் என நம்புவதில்லை. ஏனெனில் நம்முடைய செலவுகளால் நாம் சேமிக்க முடிவதில்லை. கிராமத்திலுள்ள விவசாயி முதற்கொண்டு நகரத்திலுள்ள பல்வேறு அலுவலகப் பணிகளில் ஈடுபடும் அனைத்து தரப்பினருக்கும் சேமிக்கும் பலனை இன்று அறிவுறுத்தியுள்ளோம். உங்களுடைய சேமிக்கும் தொகை மிகச் சொற்பமாக இருந்தாலும் சரி, தேவையற்ற சில செலவுகளை தவிர்த்தாலே போதும். சிப்ஸ், கூல்டிரிங்ஸ், போண்டா, பஜ்ஜி இதுபோன்ற செலவுகளைக் கூட தவிர்த்து சேமிக்கலாம்.அவ்வாறு சொற்பமாக சேமித்தது மிகப்பெரும் தொகையாக கூட்டுவட்டி முதலீட்டில் மாற்றப்படும்.இளைஞர்களாகிய உங்களால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தொகை தொடர்ந்து சேமிக்கப்படும்போது ஒரு பெரும்தொகையாகிறது.




கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகைக்கு 40 வருடங்களில் 8 % வட்டிவிகிதத்தில் கிடைக்கும் தொகையை காணலாம்.
100ரூ ஒரு மாதத்திற்கு 8 % வட்டிவிகிதத்தில் சேமிக்கப்படும்போது, 40 வருட முடிவில் கூட்டுவட்டியினால் கிடைக்கும் தொகை 3,30,747, (கூட்டிய தொகை 48000/-).
1000ரூ ஒரு மாதத்திற்கு 8 % வட்டிவிகிதத்தில் சேமிக்கப்படும்போது, 40 வருட முடிவில் கூட்டுவட்டியினால் கிடைக்கும் தொகை 33,07,470 (கட்டிய தொகை 480000/-).

# வேதபாட வழிகாட்டி

## உக்கிராணத்துவம்



**வேத வாசிப்பு :** மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம் – 1 கொரி 4 : 2

**செய்திச் சுருக்கம் :** பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு வேதாகம விளக்கங்களில் உக்கிராணத்துவம் குறித்த பல கொள்கைகளும், கோட்பாடுகளும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டுள்ளது. தேவபிள்ளைகளாகிய நாம் உலக தேவைகளை கையாளும் அனுபவம் நேர்மையானதாக இருக்கவேண்டும். தேவனுடைய அநுக்கிரகத்தினால் வாழ்கிற நம் திட்டமிடுதல், வேலை செய்கிற ஸ்தலம், சம்பளம், கொடுத்தல் எதிர்கால திட்டமிடுதல் எல்லாம் தேவனைச் சார்ந்து கவனமாக கையாளப்பட வேண்டும்.

**வரையறை :** உக்கிராணத்துவம் – ஒருவருடைய நம்பிக்கைக்கு பாத்திரமான பொறுப்புள்ள கவனமுள்ள நிர்வாக மேலாண்மை (மிரியம் – வெப்ஸ்டர்)

**I. உக்கிராணத்துவம்**

A. யாக்கோபு 1 : 17 பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகும்

B. 1 கொரி 3 : 9 நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம் (1 கொரி 4 : 2)

C. லூக் 16 : 10 – 11 உண்மையுள்ளவன்

D. மத் 25 : 14 – 30 தாலந்தை குறித்த உவமை

**II. நற்கிரியைகளுக்கு மாதிரி**

A. ரோமர் 12 : 11 அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள் (நீதி 10 : 4)

B. நீதி 24 : 30 – 34 சோம்பேறியின் வயல்

C. 2 தெச 3 : 10 – 13 அமைதலோடே வேலை செய்து தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிட வேண்டும்.

**III. கொடுங்கள்**

A. அப்போ 20 : 35 கொடுக்கிறதே பாக்கியம்

B. 2 கொரி 9 : 6 – 7 உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்

C. உபா 16 : 17 அவனவன் தன்தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவரக்கடவன்

**IV. வீட்டாரின் விசாரிப்பு**

A. 1 தீமோ 5 : 8 தன் வீட்டாரை விசாரிக்கவும்

**V. நேர்மையும் நீதியும்**

A. நீதி 22 : 1 நற்கீர்த்தி

B. நீதி 22 : 16 தரித்திரனை ஒடுக்கலாகாது

C. உபா 25 : 13 – 15 சுமுத்திரையான நிறைகல்

**VI. நியாயமான கூலி**

A. லேவி 19 : 13 கூலிக்காரனுடைய கூலி (எரே 22 : 13)

B. யாக் 5 : 4 அநியாயஞ்செய்யலாகாது

**VII. வரி செலுத்து**

A. மத் 22 : 17 – 21 இராயனுடையதை இராயனுக்கு செலுத்துங்கள்

B. ரோம 13 : 7 வரியையும், தீர்வையையும் செலுத்துங்கள்

**VIII. கடன்**

A. நீதி 22 : 7 கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை

B. ரோம 13 : 8 வரியையும், தீர்வையையும் செலுத்துங்கள்

C. சங் 37 : 21 துன்மார்க்கன் கடன் வாங்கிச் செலுத்தாமற்போகிறான்

D. நீதி 22 : 26 – 27 கடனுக்காகப் பிணைப்படுகிறவர்களில் ஒருவனாகாதே

**IX. திட்டமும், கணக்கும்**

A. லூக் 14 : 28 – 30 செல்லுஞ்செலவை கணக்குப் பார்க்கடவன்.

B. நீதி 27 : 23 உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்துகொள்

**X. சேமிப்பும், முதலீடும்**

A. நீதி 6 : 6 – 8 நீ எறும்பினிடத்தில் போய் கற்றுக்கொள்

B. நீதி 21 : 20 ஞானமுள்ளவன் சேர்த்து வைக்கிறான்

C. ஆதி 41 : 34 – 36 எகிப்தில் யோசேப்பு

D. மத் 13 : 44 – 46 விற்பதும், வாங்குவதும் (நீதி 31 : 16)

E. நீதி 13 : 22 நல்லவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கு சுதந்திரம் வைத்துப்போகிறான்

**XI. எச்சரிக்கைகள்**

A. பிரசங் 5 : 10 பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை

B. 1 தீமோ 6 : 17 – 18 நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும்

C. 1 தீமோ 6 : 9 – 10 பண ஆசை

D. லூக் 12 : 15 பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

E. மத் 13 : 22 ஐசுவரியத்தின் மயக்கம்

F. 1 யோ 2 : 15 – 17 உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்

G மாற் 8 : 36 ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?

**XII. தேவன் பேரில் பற்றுதலாயிருங்கள்**

A. மத் 6 : 19 – 33 முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்

B. பிலி 4 : 11 –13 மனரம்மியம் (எபி 13 : 5–6)

C. பிலி 4 : 19 என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி

D. 1 பேது 5 : 7 அவர் உங்களை விசாரிக்கிறவர்

**முடிவு :** அநீதியான உலகப்பெருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? லூக் 16 : 11.

# வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள
# உக்கிராணத்துவ நெறிமுறைகள்

## வேதாகமத்தில் வரையறுத்து சொல்லப்பட்டுள்ள உக்கிராணத்துவ நியதிகளைப் பின்பற்றினால் நிலையான சமாதான முடிவுகள் ஏற்படும்



**கிறிஸ்தவ உக்கிராணத்துவக் காரர்களாகிய நாம் நற்கிரியைகளுக்கு மாதிரியாக செயல்பட்டு, சரியான தருணத்தில் நேர்மையான முடிவுகள் தகுதியாய் எடுக்கப்பட வேண்டும்**

**நன்னெறி சார்ந்த நெறிமுறைகள்**
கிறிஸ்தவர்களாகிய நாம் அசதியாயிராமல் ஜாக்கிரதையா யிருங்கள் (ரோமர் 12 : 11). நீதி 24:34 – சோம்பேறியின் வயலைக்குறித்து சொல்லப்பட்டுள்ளது. இதோ அவனுடைய நிலங்களெல்லாம் முள்ளுக்காடாயிருந்தது. தந்திரமும், வறுமையும் சோம்பேறித் தனத்தினால் வந்தது. ஆகையால் ஒரு கிறிஸ்தவ நிதி நிர்வாகி அல்லது நல்ல உக்கிராணக் காரன் கடின உழைப்பும் நல்ல நெறிமுறை களோடும், நேரந்தவறாமை கடைபிடித்து சரியான முடிவுகளை எடுத்து திறம்பட நிர்வாகம் செய்ய வேண்டும். சமுதாயம் சார்ந்த நல்வாழ்வும் வேதாகம ஆவிக்குரிய வாழ்வுக்கும் வித்தியாசம் உண்டு 2 தெச 3 : 10 – 12 ல் ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதுதென்று பவுல் கூறுகிறார். ஆகையால் சோம்பேறியாய் இருக்கிறவன் சாப்பிட தகுதியில்லாதவன் உழைத்து தன்னுடைய சாப்பாட்டை சாப்பிடக்கடவன். ஆதாம் வீழ்ச்சிக்கு பிறகு, தேவன் தாம் படைத்த மனிதன் நிலத்தில் தன் வியர்வை சிந்த பாடுபட்டு, நிலத்தை பண்படுத்தி, விதைத்து, பயிரிட்டு சாப்பிடவே கட்டளை கொடுத்தார்.

**முதலாவது தேவனுக்கு கொடுங்கள்**
உங்கள் வயலின் முதல் பலனை தேவனுக்கென்று கொண்டு வாருங்கள். நல்ல உக்கிராணக்காரன் தேவனுடையதை தான் வைத்துக் கொள்ள மாட்டான். ஏழைகளுக்கு உதவுவதற்கும், சுவிசேஷப் பணிகளுக்கென்று தேவனுடைய நல்ல உக்கிராணக் காரனானவன் தாராளமாகவும், உற்சாகமாகவும் கொடுப்பான். உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத் தக்கதாக அவனவன் தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவரக்கடவன் (உபா 16 : 17). கொடுத்தல் என்பது நல்ல உக்கிராணத் துவத்தின் தன்மை ஏனெனில் உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொரி 9 : 6 – 7). வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் (அப்போ 20 : 35). கொடுப்பது முதற்கனியாக தேவனுக்கென்று அர்ப்பணிப்போடும், எல்லா தேவைகளின் மத்தியிலும் கொடுக்கப்பட வேண்டும்.

**சொந்த குடும்பத்தை விசாரிக்க வேண்டும்**
1 தீமோ 5 : 8 ல் ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான் என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது. ஒரு மனிதன் முதலாவது தேவனுக்கென்று கொடுக்கக்கடவன் பின்புதான் மனைவி, பிள்ளைகளுக்கு அவர்களுடைய தேவைகளுக்காக செலவிட வேண்டும். கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொண்டு குடும்பத்திற்கு செலவு செய்யாமல் மற்ற காரியங்களுக்கு செலவிடுகிறவனும் தேவனை மறுதலிக்கிறவனே.

**நேர்மையும் - நன்னெறியும்**
பணம் சம்பாதிக்க நிறைய வழிகள் உண்டு. ஆகவே நல்ல உக்கிராணக்காரன் தன் சொந்த வீட்டிலும், வெளியிலும் நேர்மையாகவும், நல்லவழி காட்டியாகவுமே திகழ வேண்டும், நீதியும், நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம் (நீதி 21 : 1). இன்று உலகில் பலர் பிறரை ஏமாற்றியோ அல்லது குறுக்கு வழிகளிலோ, முறையற்று பணம் சம்பாதிக்கிறார்கள், தனக்கு அதிகம் உண்டாகத் தரித்திரனை ஒடுக்குகிறவன் தனக்கு குறைச்சலுண்டாகவே ஐசுவரியவானுக்கு கொடுப்பான் (நீதி 22 : 16). உபா 25 : 13 – 15 ல் உன் வீட்டில் பெரிதும் சிறிதுமான பலவித படிகளையும் வைத்திருக்க வேண்டாம் என்று சொல்லப்பட்டுள்ளதால், நம்முடைய படியும், தராசும் சுமுத்திரையான நிறைகல்லும், படியுமாய் இருக்க வேண்டும். ஏமாற்று குறுக்குவழியில் சம்பாதிப்பது இந்த சமுதாயத்திலே ஒருவருடைய பணபலத்தை அதிகரிக்கும். ஆனால் தவறான வழியில் சேர்ந்த ஐசுவரியம் நிலைபெறாது.

**வேலைக்கான கூலியையும், மற்ற தொகையையும் செலுத்த தாமதிக்காதேயுங்கள்**
வேலையாள் கூலிக்கு பாத்திரவானாய் இருக்கிறபடியால், அதினதின் வேலைக்குத்தக்க சமயத்தில் கூலியை பெற்றுக் கொள்ள நல்ல உக்கிராணக்காரன் உண்மையாய் இருக்க வேண்டும். எரேமியா 22 : 13 மற்றும் லேவி 19 : 13 அநீதியினாலே தன் வீட்டையும், அநியாயத்தினாலே தன் மேலறைகளையும் கட்டி, தன் அயலான் செய்யும் வேலைக்குக் கூலிகொடாமல், அவனைச் சும்மா வேலைகொள்ளுகிறவனுக்கு ஐயோ! என்று எச்சரிக்கப்பட்டுள்ளது, அதாவது நம் வீட்டிலுள்ள எலக்ட்ரிக்கல், பிளம்மிங் வேலைகளை செய்து தரும் நபர்களை சும்மா வேலைகொள்வது அவர்களை கொள்ளையடிப்பதற்கு சமம். இதோ உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய் பிடிக்கப்பட்டு கூக்குரலிடுகிறது அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது (யாக் 5 : 4). கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கை நேர்மையானதாக இருப்பின் நம்மில் நல்ல உக்கிராணத்துவம் வெளிப்படும்.



**ஆவிக்குரிய தேவபிள்ளைகளுக்கும் தேவன் ஏற்படுத்திய உலகப்பிரகாரமான காரியங்களுக்கு கீழ்ப்படிகிற உலகமனுஷர்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு**

**வரி செலுத்து**

பெரு முதலாளிகள் அரசாங்கத்தை ஏமாற்றும் காரியம் வரி, பல நாடுகளில் நடக்கும் அவலநிலை அது. வேதாகமம் தெளிவாக கூறுகிறது இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் (மத் 22 : 21). அரசாங்கவரி செலுத்துதலின் தேவையை அறிந்து சொல்லியிருக்கிறார் கர்த்தர். ரோமர் 13 : 7ம் கூட எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்கு தீர்வையை செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் வாழும் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும்.

**கடன்**

ரோமர் 13 : 8 சொல்லுகிறது ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல். மற்றொன்றிலும் கடன்படாதிருங்கள். வேதாகம் கூறுகிறபடி கடன்வாங்க நாம் முடிந்தவரை தவிர்க்க வேண்டும். அதுபோல வாங்கிய கடனை சரியாக திருப்பியும் செலுத்த வேண்டும். அன்பு என்கிற கடனை தவிர மற்ற எல்லாவித நிதி சார்ந்த கடன்களையும் திருப்பி செலுத்திவிடுங்கள். கடன் மற்றும் கடன் வாங்குதலை சரியாக திட்டமிட்டு முறையாக கையாளும் போது பிரச்சனை இல்லை. கடன்சுமை கொடுத்தவனுக்கும் அதை வாங்கினவருக்கும் சமாதானத்தை இழந்து போகச் செய்யும் இந்த கடனும், பணமும் ஆவிக்குரிய சமாதானத்தை கெடுத்துவிடும். நீதி 22 : 7 சொல்லுகிறது கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை இன்று பலர் கடனுக்கு அடிமைப்பட்டு, பணப்பிரச்சனைக்குள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் அதுமாதிரியான அடிமைத்தனங்களிலிருந்து நம்மை மீட்டெடுத்துப் பாதுகாத்திட கர்த்தர் விரும்புகிறார். துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற் போகிறான்; நீதிமானோ இரங்கிக் கொடுக்கிறான் (சங் 37 : 21).

கடன் என்பது பிசாசானவன் தந்திரமாய் கொண்டு வருகிற ஒரு காரியம் பல சமயங்களில் தேவையற்ற பொருட்களை வாங்கி, ஊதாரித்தனமாக செலவிடுவதின் விளைவாகத்தான் கடன் ஏற்படுகிறது. பேராசை, கர்வம், பெருமை இதுபோன்ற எண்ணங்களால் இந்த சந்ததியினர் கிரெடிட்கார்டு என்று சொல்லப்படுகிற கடன் அட்டைக்கு அடிமையாய் இருக்கிறார்கள் சில இளம் தம்பதியினரும் கூட இதுபோன்று தன் அம்மா, அப்பா இருவரின் பல வருட உழைப்பால் கிடைத்த செல்வாக்கை சீரழிக்கிறார்கள். இளம் தலைமுறையினர் இதைக் குறித்த விழிப்புணர்வோடு பயணிக்க வேண்டும், கடனில் சிக்கித் தவிக்கும் பலர் மன சமாதானத்தையும், சந்தோஷத்தையும் இழப்பதோடு, மாத்திரமல்ல, தேவனுடைய ஊழியத்துக்கு கொடுக்கும் காரியங்களிலும் நாம் பின்தங்கிவிடுவோம். நம்முடைய வாழ்வின் பழக்க வழக்கமுறைகள் ஒழுக்கமாக அதேசமயம் எளிமையும், நவீனமும் நிறைந்ததாக இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

**திட்டமிடுதலும் - பட்ஜெட்டும்**

ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருக்கிறவன், அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ் செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோ? என்று இயேசு (லூக் 14 : 28 - 30) குறிப்பிடுகிறார். இது சாதாரணமாக யாவரும் கடைபிடிக்க வேண்டிய அடிப்படையான காரியம். நம்முடைய வருமானத்திற்கு ஏற்றபடி திட்டமிட்டு செலவு செய்வது, கொடுப்பது, சேமிப்பது என்பது ஞானமுள்ள இருதயம். வழக்கமாக நம்முடைய வருமானத்தையும், செலவுகளையும் எழுதி எடுக்கப் பழகிக் கொள்ளுங்கள். பல ஜனங்கள் கவனக்குறைவாக இருந்து கொண்டு, தங்களுடைய பொருளாதார நிலமையை நன்றாய் அறிந்துகொள்வதில்லை; உன் மந்தைகளின் மேல் கவனமாயிரு (நீதி 27 : 23). நம்முடைய ஞானமும், நாம் வைத்துக்கொள்ள தகவலும் ஒரு முடிவு எடுக்க உதவியாய் இருக்கும் பட்ஜெட்டும், திட்டமிடுதலும் ஏழை, பணக்காரர் ஆகிய இருவருக்கும் முக்கியமானது.

**சேமிப்பும் - முதலீடும்**

சேமிப்பும் முதலீடும் என்றதும் தேவன்பேரில் நாம் கொண்ட விசுவாசத்தை இழந்து செய்கிற காரியம் என்று எண்ணாதேயுங்கள். ஏனெனில் தேவனுடைய வார்த்தை தெளிவாக கூறுகிறது. சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள்...கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்து வைக்கும் நீதி 6 : 6-8. எகிப்திலே பார்வோன் ராஜாவின் நாட்களில் ஏற்பட்ட பஞ்சத்திலிருந்து தேவன் அதை காக்கும்படிக்கு, விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை பத்திரப்படுத்தி, சேர்த்து வைக்கக் கடவர்கள் என்றார் (ஆதி 41 : 34-36). ஞானமுள்ள பலர் தங்களுடைய முதுமைப் பருவத்தில் தங்களால் வருமானம் ஈட்ட முடியாது. ஆகவே இப்போதே சேமிக்கும் பழக்கமுடையவர்களாக இருப்பர். விளைச்சல் சில வருடங்களில் செழிப்பும், சிலசமயங்களில் குறைச்சலையும் உண்டாக்கும்போது, திட்டமிடுதலும், சேமிப்பும் கைகொடுக்கும்.

இயேசு பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறதையும், அதைக் கொள்ளுகிறவனையும் ஆவிக்குரிய உவமையாக கூறுகிறார் (மத் 13 : 44-46). மேலும் ஒரு தாலந்தை வாங்கினவன் காசுக்காரருக்கு கூட பிரயோஜனப்படாதபடி அதை நிலத்தில் புதைத்துப்போட்ட உவமையையும் கூறியிருக்கிறார்.சேமிப்பு என்று வரும்போது கூட்டுவட்டி மூலம் நீண்ட நாட்களுக்கு ஒரு சிறுதொகை சேமிக்கப்படும் போது, பணத்தின் மதிப்பு பெருகும். இளமைப் பருவம் அதற்கு சரியானது.பணத்தை செலவுசெய்ய ஏராளமான வழிகள் உண்டு. ஆனால் ஒருசிலரே எதிர்காலத்தை எண்ணி சேமிப்பவர்கள்.

**எச்சரிக்கை**

பணத்தின் தேவைகள் பலவாறாக இருப்பினும் அதை தேவனுக்கு ஏற்றவிதமாய் எப்படி கையாள வேண்டும்.அதில் எச்சரிக்கைகளும் சொல்லப்பட்டுள்ளது. பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை(பிர 5 : 10). ஆகவே நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும் ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும்

(1 தீமோ 6 : 17-18) அறிவுறுத்தப் படுகிறோம். ஆகவே நல்ல உக்கிராணக் காரனாகிய நாம் இந்த உலகத்திலும் உலகத்திலுள்ள வைகளிலும் அன்புகூர வேண்டாம் (1 யோவான் 2 : 15 - 17). பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (லூக் 12 : 15). உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் சிலரை பெலனற்றுப்போகப் பண்ணும் (மத் 13 : 22). உண்மையான பொக்கிஷம் கிறிஸ்துவினிடத்திலுண்டு. ஆகவே நம்முடைய நோக்கமும் செயலும் அவரை மையப்படுத்திதான் இருக்கவேண்டும். ஏனெனில் மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மாற் 8 ; 36).

இவ்வுலகத்திலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். ஏனெனில் பரலோகப்பிதா நமக்கு என்ன தேவை என்பதை முன்பதாகவே அறிந்திருக்கிறார்(மத் 6 : 19-33). இவ்வுலக மக்கள் பணத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவம்போல கிறிஸ்தவர்களாகிய நாமும் செயல்பட கூடாது. நம்முடைய ஒரே விசுவாசமும், நம்பிக்கையும் தேவன்பேரில் எப்போதும் இருக்க கடவது.

தேவபிள்ளைகளாகிய நாம் மனரம்மியமாயிருக்க கற்றுக்கொள்ள வேண்டும் (பிலி 4 : 11-13).என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் (பிலி 4 : 19).

உக்கிராணத்துவத்தைக் குறித்து ஒவ்வொரு தேவபிள்ளைக்கும் தேவன் விசேஷித்த ஞானத்தைக் கொடுத்து ஆசீர்வதிப்பாராக. உலகத்தின்பால் பற்றுள்ளோரும், சுயநீதியை கொண்டோரும் இந்த உபதேசங்களை மறுத்தால் ஆவிக்குரிய ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்படுவார்கள்.ஏழ்மையோ, ஐசுவரியமோ ஆவிக்குரிய அடையாளம் அல்ல. மாறாக தேவ வார்த்தைக்குக் கீழ்படிவதை காட்டுவது நல்ல உக்கிராணத்துவமே. இந்த சத்திய வார்த்தைக்கு முழு இருதயத்தோடு கீழ்ப்படிகிறவர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதங்கள் நிச்சயமாய் உண்டு. அநீதியான உலகப் பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? (லூக் 16 : 11).



முதலாவது உங்களால் இயன்றமட்டும் சம்பாதியுங்கள்
இரண்டாவது முடிந்தவரை சேமியுங்கள்
பிறகு முடிந்தவரை மற்றவர்களுக்கு கொடுத்து உதவுங்கள்
-ஜான் வெஸ்லி

# திருமணம் - பொருளாதாரம்

பணமே திருமணத்தில் ஏற்படும் பல பிரச்சனைகளுக்கும், விவாகரத்துக்கும் காரணம் என்று பல ஆராய்ச்சி முடிவுகள் காட்டுகிறது. பணப்பிரச்சனை என்பது உலகத்தார்போல பார்க்கும்போது கடினம். கீழே சொல்லப்பட்டுள்ள வேதாகம நியதிகளைக் கைக்கொள்ளும்போது எளிமையாகிறது. விவாகப்பந்தம் குறித்து மத் 19 : 6 ல் சொல்லும்போது கணவனும், மனைவியும் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

ஆகவே திருமணம் என்பது ஒற்றுமையையும், ஒருமைத்தன்மையையும் காட்டுகிறது.ஆகவே இதே நியதியே பொருளாதார திட்டமிடலுக்கும் ஏற்றது. கலாச்சாரத்தால் நாம் வேறுபட்டாலும் திருமணப் பந்தத்தில் மனம் ஒத்து இணைவது போல பொருளாதார முடிவுகளும் கூட்டாக எடுக்கப்பட வேண்டும்.எப்போதுமே தனிப்பட்ட



முடிவுகளும் நிர்வாகமுமே தடையை முதலாவது உருவாக்கும்.ஆகவே கலந்து ஆலோசித்து சேர்ந்து உழையுங்கள், சம்பாதியுங்கள், செலவு செய்யுங்கள், முதலீடு செய்யுங்கள், சேமியுங்கள்.

சலுகை மனநிலை போன்ற செயல் ஒரு தரப்பினரிடமிருந்து மற்றொருவருக்கு கொடுக்கப்படும்போதுதான் உறவுகள் பாதிக்கப்படும்.பொருளாதார காரியங்களின் முடிவு எப்போதும் சேர்ந்தே எடுக்கப்பட வேண்டும்.திருமணத்தில் ஏற்படும் வீண் மன உளைச்சல்களை சரியான திட்டமிடுதலினாலும், பேசி தீர்ப்பதினாலும் தீர்வு காணலாம்.

எல்லோரும் கலந்தாலோசித்து திட்டமிடப்பட்ட பட்ஜெட்டை ஏற்றுக்கொண்டு, அதற்கேற்றவிதமாய் செலவழிக்கப் பழகிக்கொண்டால், குடும்பத்தின் அனுதின சண்டை சச்சரவுகள் தீரும். இதுமாதிரியான பொருளாதார காரியங்கள் திருமண விஷயத்தில் பேசப்படும்போது, மரியாதையோடும், மதிப்போடும் மற்றவர்களுடைய பங்கையும் அங்கீகரித்து முடிவெடுக்கப்பட வேண்டும்.

கணவனும், மனைவியும் இருவருமாக சேர்ந்து உழைத்து, பொருளாதார தீர்மானங்கள் ஆலோசித்து எடுக்கப்பட வேண்டும்.அப்போதுதான் மனசமாதானத்தோடு வாழ்க்கை இருக்கும்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

உங்களுக்குத் தெரியுமா?

### நல்ல கடன் – கெட்ட கடன்

*எல்லாவிதமான கடனும் ஒரே மாதிரி இருக்காது நல்லகடன் என்பது நாம் கடனாக வாங்கிய பணமானது கல்வி, தொழில், ரியல் எஸ்டேட், சொத்து, முதலீடு இவைகளில் செலவிடப்படும்போது அது இலாபத்தை தருமானால் சரியானது. சில சமயங்களில் சரி என்று எடுத்த கடனும் கூட நஷ்டத்தை ஏற்படுத்துவதுண்டு.*

*கெட்ட கடன் என்பது தேய்மானம் சார்ந்த கார், உடைகள், வீட்டு உபயோகப்பொருட்கள் மற்றும் இதர சேவைகளுக்காக வாங்கப்படும் கடன். கடன் அட்டை என்று சொல்லப்படும் கிரெடிட் கார்டு வட்டி சதவீதம் மிகவும் அதிகமான ஒன்றாயிருப்பதால் இதுவும் தேவையற்ற ஒன்றே.*

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## உங்களுக்கு வேண்டியவைகளை பரமபிதா அறிந்திருக்கிறார்

என்னத்தை உண்போம்.. என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் (மத் 6:31-33).



முழுநேர ஊழிய பணியில் அர்பணிப்போடு செயல்படும் தேவ ஊழியர்கள் அடிக்கடி பொருளாதார தேவையை சந்திப்பதிலும் எதிர்கொள்வதிலும் கடினமான சூழ்நிலைகளை கடந்து வரவேண்டியதிருக்கும் ஆயினும் இவ்வுலகப் பொக்கிஷங்களுக்காக அல்ல, கர்த்தருடைய விலையேறப் பெற்ற மகிமையான பொக்கிஷத்தையே எதிர்நோக்கி காத்திருக்கிறார்கள். தேவன் கொடுத்த ஈவு வரங்களும் கிருபையாய் கிடைத்த நாட்களும் தேவராஜ்யப் பணிக்கென்று நம்மை உந்துகிறது.

ஆயினும் இவ்வுலக வாழ்விற்கு பணம் ஒரு தேவையாக உள்ளது. அவருடைய ஊழியக்காரரின் தேவைகள் நீங்கள் வேண்டிக்கொள்ளும் முன்னரே அவர் அறிந்திருக்கிறார். உறுதியான விசுவாசத்தோடு தேவசமுகத்தில் பெரிய நோக்கத்தோடும் திட்டத்தோடும் செயல்பட வேண்டும்.

பிலிப்பியர் 4 : 11-13 ல் பவுல் சொல்கிறார் என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்னியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு. அவருடைய நாமத்தின் மகிமைக்கென்று வாழும்போது அவருடையஅன்பையும் இரக்கத்தையும் அளவில்லாமல் நம்மேல் பொழியப்பண்ணுவார்.

நம் பரலோக தேவன், நம்முடைய பிரச்சனைகளையும், பொருளாதார தேவைகளையும், குடும்ப சூழ்நிலைகளையும் நன்றாக அறிந்து வைத்திருக்கிறவர், மாற்றக்கூடிய இவ்வுலக வாழ்வுக்காக தேவன் பேரில் கொண்ட பற்றுதலை விட்டு விடாதீர்கள். தேவன் தாம் சொன்ன வாக்குத்தத்தங்களினிமித்தம் தம்முடைய ஊழியக்காரருக்கு செய்வது அதிக நிச்சயம்.

CONTACT :-

**The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.**

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD Worship Place: Church Street, Kolarpatti, Pollachi-Tk - 642 107

**தேவசபை ஆராதனை நடைபெறும் இடம் : சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - தாலுகா - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த ஆலயத்திற்கும் செல்லாமல் இருப்பவர்கள் எங்களுடன் பரிசுத்தஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with us on Real Truth    Phone (போன்) : 9597562641

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316